**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.380/2022

வா.சா.1 முருகவேல்

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை:–**

1. தாவா சொத்து எப்படி பாத்தியம் என்றால் தானசெட்டில்மெண்ட் எனக்கு பாத்தியமாகும். 23.09.2014ல் வாடகைக்கு பேசி பிரதிவாதி என்னிடம் வாடகைதாரராக இருந்து வருகிறார். மாதம் ரூ.2,500/– வாடகை ஆகும். பிரதிவாதி வாடகை முன்தொகையாக ரூ.50,000/– கொடுத்தார். அதன்பிறகு ரூ.5,000/– பிரதிவாதியிடமிருந்து நான் வட்டிக்கு கடன் வாங்கினேன்.

2. 04.07.2018ல் ரூ.5,000/– மாதவாடகை உயர்த்தி கேட்டதில் பிரதிவாதி மறுத்ததால் அவரை தாவா சொத்திலிருந்து காலி செய்யவேண்டுமென்று சொன்னேன் என்றால் சரியல்ல. கட்டிடம் இடியும்படி உள்ளதால் அவரை காலி செய்ய சொன்னேன்.

3. கட்டிடத்திலிருந்து காலி செய்யச்சொல்லி தொந்தரவு செய்ததால் மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றம், ஈரோட்டில் அ.வ.எண்.337/2018 ல் பிரதிவாதி என்மீது வழக்கு தொடர்ந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் இடைக்கால தடை பிறப்பிக்கப்பட்டு அதற்குரிய அழைப்பாணையும் நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அசல் வழக்கில் நான் ஆஜராகாததால் 14.06.2019ல் எனக்கு எதிராக தீர்ப்பாகிவிட்டது என்றால் சரிதான்.

4. தீர்ப்பான பிறகு 12.12.2021ம் தேதியில் இந்த வழக்கு சொத்தின் முன் கதவை திறக்கமுடியாத படி வெல்டு வைத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

இந்த வழக்கு சொத்து தறி குடோன் என்றால் சரிதான். அதிலுள்ள கதவுகள் இரும்பு கதவுகள் என்றால் சரிதான். அந்த குடோனுக்கு முன் கதவு இரும்பு கதவு மற்றும் அதே குடோனுக்கு பின்புறம் மரக்கதவு ஆகும். ஆகவே இருபுறமும் சென்று வர வழி உள்ளது.

5. அந்த தாவா கட்டிடத்தில் 6 விசைத்தறி பிரதிவாதியால் அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு 3HP மின்இணைப்பு உபயோகப்படுத்திக் கொண்டு இருந்தார். அந்த மின் மோட்டார், தார் மெசின், விசைத்தறி இயங்குவதற்கான சாப்ட் பெல்ட் ஆகியவை மேற்கண்ட தாவா கட்டிடத்தில் பிரதிவாதியால் அமைக்கப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான்.

6. நீதிமன்ற தீர்ப்பை அவமதிக்கும் வகையில் குடோனின் முன்கதவை வெல்டு வைத்து தாவா சொத்தை உபயோகிப்பதை இடையூறு செய்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணமான 27.01.2022ல் வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதி நீதிமன்ற அவமதிப்பு தொடர்பாக அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.11 ஆவணமான ஈரோடு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்புக்காக நிறைவேற்று மனு எண்.6/2022 என்மீது பிரதிவாதி தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். நிறைவேற்று மனு வழக்கு நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளது. அது தொடர்ந்து நடந்து வருகிறது.

**பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**